2017 ஜூன் 22]

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவரது தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டிருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டி, மேலும் ஒரு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி தேவை என்பதைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அங்கே மாணவர்களுடைய அடர்வுக்கேற்ப, மாணவர்களின் சேர்க்கை சதவிகிதத்தினையெல்லாம் கருத்தில் கொண்டு, அவரது தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி எங்கிருக்கிறது, அங்கிருந்து தொலை தூரம் செல்ல வேண்டுமா அல்லது அருகில் இருக்கின்றதா என்பதையெல்லாம் கலந்தாலோசித்து, தேவைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைச் சுட்டிக்காட்டி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 65, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

65—

விடுகள் கட்டுதல்

***1556—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

துறைமுகம் தொகுதி, 59—வது வட்டம், பல்லவன் நகரில் வசிப்பவர்களுக்கு வீடுகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை துறைமுகம் தொகுதி, 59—வது வட்டத்தில் உள்ள பல்லவன் நகர் குடிசைப் பகுதியில் 753 குடும்பங்கள் வாழ்வதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இக்குடிசைப் பகுதி அமைந்துள்ள இடம் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமானதாகும். சென்னை நதிகள் சீரமைப்புத் துறையால் கூவம் நதியை ரூ.604 கோடியே 77 இலட்சம் செலவில் மேம்படுத்த அரசாணை (நிலை) எண் 9, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைமூலம், 31—1—2015—ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. கூவம் நதி மேம்பாட்டுத்

திட்டப் பணிகளுக்குத் தேவைப்படும் நிலத்தில் இக்குடிசைப் பகுதி அமைந்துள்ளதாலும், கடலோரக் கட்டுப்பாட்டு விதிகளின்படியும் இப்பகுதியில் வீடுகள் அமைக்க இயலாது. இப்பகுதியில் வாழ்கின்ற 726 பயனாளிகளுக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் கடந்த 2015 ஆம் ஆண்டு ஜூலை மாதம் சென்னை பெரும்பாக்கம், எழில் நகர் திட்டப் பகுதியில் ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், அந்த மக்கள் விருப்பமின்மை காரணமாக பெரும்பாக்கம் பகுதிக்குச் செல்லவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். குடிசை வீடுகள் தீப்பற்றி எரியும்போது அதில் பாதிக்கப்படுகின்ற ஏழைத் தாய்மார்கள் தெய்வத்தைப் பார்த்து தாயே இது அடுக்குமா, அடுக்குமா என்ற கேள்விகளைக் கேட்பார்கள். அதற்கு விடை காணத்தான் தலைவர் கலைஞர் அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தை உருவாக்கிக் காட்டினார். (மேசையைத் தட்டும் ஒலி) குடிசைமாற்று வாரியத்தின் வாயிலாக அடுக்குமாடி, அடுக்குமாடி என்று பல அடுக்குமாடிகளைக் கண்ட தலைவர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) நின்ற தேர்தலில் எல்லாம் வென்ற சரித்திரத்தைப் படைத்தவர். 5 விரல் காட்டி, 5 முறை முதலமைச்சராகி, அஞ்சுகத் தாயின் பிள்ளையாக இருக்கின்ற தலைவர் கலைஞர் அவர்களுக்கு வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

குளங்களைத் தூர் வாரினால்தான் நீராதாரம் காக்கப்படும் என்பதால், குளங்களைத் தூர் வாருவதில் இலட்சியத்தோடு செயல்படும் தளபதி அவர்கள் நின்ற தொகுதிகூட கொளத்தூர் தொகுதியாக அமைந்திருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) கொளத்தூர் தொகுதி கோகினூர் வைரத்திற்கு வணக்கம்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை பெரும்பாக்கம், எழில் நகர் திட்டப் பகுதியில் 726 வீடுகள்

2017 ஜூன் 22]

ஒதுக்கீடு செய்ய முன்வந்தும், அங்கு செல்வதற்கு அந்த மக்கள் மறுக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் கூறுவது உண்மை. அந்தப் பகுதியிலே 30 ஆண்டுகளுக்கு மேலாக அவர்கள் சுயமாகத் தொழில் செய்து வாழ்ந்து வருகிறார்கள். 40 கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்கின்ற அந்தப் புதிய திட்டப் பகுதிக்குச் சென்றால், அவர்களுடைய வாழ்வாதாரமும், குழந்தைகளின் கல்வியும் பாதிக்கப்படும். துறைமுகம் தொகுதியிலேயே அமைந்திருக்கின்ற வால்டாக்ஸ் ரோடு பகுதியில் 5 ஏக்கருக்குமேல் சென்னை மாநகராட்சியின் இடம் இருக்கின்றது. 2017–2018 ஆம் ஆண்டு 20,000 குடியிருப்புகள் கட்டப்போவதாக நிதிநிலை அறிக்கையிலே மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அந்த நிதியைப் பயன்படுத்தி, அந்தப் பகுதியிலேயே அவர்களுக்கு வீடுகளைக் கட்டித் தந்தால் அவர்களுடைய வாழ்வாதாரம் சிறக்கவும், பொருளாதாரத்தை ஈட்டி அவர்கள் குடும்பத்தை நல்லமுறையில் வாழ வைக்கவும் ஏதுவாக இருக்கும் என்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் திட்டப் பணிகளைத் துவக்க, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கருணைகூர்ந்து அவருக்கு அறிவுறுத்துமாறு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியிலேயே, வால்டாக்ஸ் சாலையில் மாநகராட்சிக்குச் சொந்தமான 5½ ஏக்கர் நிலம் உள்ளதாகச் சொன்னார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் ஆகியோருடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு அங்கேயே வீடுகள் கட்டித் தருவதற்கு நிதிநிலைக்கேற்ப பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறைமுகம் பகுதியில் சாலையோரங்களிலே

வசிக்கின்ற மக்களினுடைய எண்ணிக்கை 2,000 குடும்பங்களைத் தாண்டும். காலைக் கடன்களைக்கூட கழிப்பதற்கு முடியாமல் வெட்டை வெளிகளை தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டு, வெயிலையும், மழையையும் வர்தா புயல் போன்ற கொடுமையான இயற்கைச் சீற்றங்களையும் தாங்கிக்கொண்டு, தங்களுடைய வாழ்விற்குப் பிறகு பேரப் பிள்ளைகளின் வாழ்வையும் அந்தப் பகுதிகளிலேயே 40 ஆண்டுகளுக்கு மேலாக அவர்கள் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். பெரும்பாக்கத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 4,000–க்கும் மேற்பட்ட வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருப்பதாக அறிவித்திருந்தார்கள். நாவலூர் திட்டப் பகுதியிலே 2,750 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, 3 ஆண்டுகளுக்கு மேலாக அவை பூட்டியே கிடக்கின்றன. சாலையோரங்களில் வசிக்கின்ற 2,000–க்கும் மேற்பட்ட மக்கள், முன்னறிவிப்பு இல்லாமல் திடீர் திடீரென்று மாநகராட்சியால் அப்புறப்படுத்தப்படுகிறார்கள். ஒரு வார காலத்திற்குள் அதே இடத்தில் மீண்டும் அவர்கள் குடியமர்கிறார்கள். வேறு வழியில்லாததால், நிர்க்கதியாய், நிம்மதியற்று சாலையோரங்களிலே வசிக்கின்ற அந்த மக்களுக்கு, அவர்களுடைய வாழ்வாதாரத்தை மனதிலே வைத்துக் கொண்டு, பெரும்பாக்கம் மற்றும் நாவலூர் திட்டப் பகுதிகளில் வீடுகளை ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் செல்வதற்குத் தயாராக இருக்கின்றார்கள். துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எல்லீஸ்புரம், கிளைவ் பேட்டரி, பி.ஆர்.என். கார்டன் மற்றும் கல்யாணபுரம் பகுதிகளில் 35 ஆண்டுகளுக்கு முன்பாகக் கட்டப்பட்ட சிதிலமடைந்த வீடுகளிலே வசித்துக் கொண்டிருக்கின்றார்கள். 2017–2018 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு 808 கோடி ரூபாய் செலவில், 3,300 புதிய குடியிருப்புகளைக் கட்டிக்கொடுப்பதாக அறிவித்திருக்கின்றார். இந்த 2 திட்டப் பகுதிகளில், இதையும் இணைத்துக் கொண்டு, அடுத்த ஆண்டு மீண்டும் இப்படி ஒரு கேள்வியை நான் கேட்கின்றபோது அவர்கள் வாழ்வாதாரம் புதிய அடுக்குமாடி வீடுகளிலே தொடரப்பட்டுவிட்டது என்ற ஒரு நல்ல செய்தியைச் சொல்ல, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவதற்கு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அறிவுறுத்த வேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

2017 ஜூன் 22]

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது பெரும்பாக்கம் பகுதியிலே 4,000 வீடுகள் இருப்பதாகச் சொன்னார்கள். அது தவறான தகவல் என்பதை முதலிலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, சென்னை மாநகரில் ஆற்றுப் படுகைகளில் வசிக்கின்ற மக்களுக்காக ஏறத்தாழ 20,376 வீடுகளைக் கட்டி, சரித்திர சாதனையை படைத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவரை கட்டப்பட்ட 20,376 வீடுகளில், 4,613 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றன. இன்னும் 4,716 வீடுகள் ஒதுக்கீடு செய்வதற்கு தயாராக இருக்கின்றன. சாலையோரங்களில் வசிப்பவர்களுக்கு அந்தப் பகுதிகளில் வீடுகளைக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் எத்தனை பேர் இருக்கின்றார்கள் என்கின்ற பட்டியலெல்லாம் இப்போது எடுத்திருக்கின்றோம். எங்களுக்குக் கிடைத்த தகவல்படி, ஏறத்தாழ 300 வீடுகளைக் கொடுக்கும் அளவிற்கு சாலையோரங்களில் வாழும் மக்கள் இருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கின்றது. ஆனால், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அங்கு 2,000 குடும்பங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அந்தப் பட்டியலைக் கொடுப்பார்களேயானால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அரசு ஏழையெளியவர்களுடைய நலன் காக்கின்ற அரசாக இருக்கின்றபடியால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலோடு, பெரும்பாக்கத்தில் இருக்கின்ற வீடுகள் அவர்களுக்கெல்லாம் உடனடியாகக் கொடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, துறைமுகம் தொகுதியில் பி.ஆர்.என். தோட்டம், காமராஜ் காலனி, கல்யாணபுரம், எல்லீஸ்புரம் ஆகிய பகுதிகளில் மொத்தம் 677 வீடுகள் கட்டப்பட்டு, பல ஆண்டுகள் ஆனதாகச் சொன்னார்கள். அந்தப் பகுதிகளுக்கு 2011 முதல் 2017 ஆம் ஆண்டுகளில் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தலுக்காக மட்டும் ரூ.96.84 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது என்பதை

இந்த அவையில் பதிய வைக்க விரும்புகின்றேன். அதேபோல், 2017–2018 ஆம் ஆண்டில் ரூ.60 இலட்சம் செலவில் பழுதுபார்க்கும் பணிகள் நடைபெறவிருக்கின்றன என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள். (குறுக்கீடு) திரு. சேகர்பாபு, அமைச்சரிடம் அந்தப் பட்டியலைக் கொடுத்துவிடுங்கள். (குறுக்கீடு) நீங்கள் பட்டியலைக் கொடுங்கள். அமைச்சரிடம் என்னவென்று பார்க்கச் சொல்லலாம். திரு. மனோ தங்கராஜ், பேசுங்கள்.*

திரு. த. மனோ தங்கராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதியில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகள் அமைந்திருக்கின்றன. அந்த அணைகளிலிருந்து செல்கின்ற சானல்கள் எனது தொகுதிக்குட்பட்ட 6 பேரூராட்சிகள், திற்பரப்பு, குலசேகரம், பொன்மனை, குமாரபுரம், கோ. நல்லூர், திருவிதாங்கோடு ஆகிய பேரூராட்சிப் பகுதிகளையும், பத்மநாபபுரம் நகராட்சிப் பகுதியையும் கடந்து செல்கின்றன. அந்தச் சானல்களின் கரையோரங்களில், ஏழையெளிய மக்கள் குடிசைகளை அமைத்துக்கொண்டு கழிப்பறை மற்றும் திடக் கழிவு மேலாண்மைத் திட்டம் போன்ற எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இல்லாமல், நீண்ட காலமாக வாழ்ந்து வருகிறார்கள். அந்தக் கழிவுகள் எல்லாம் சானல்களில் கலந்துவிட்டபடியால், அவை மிகப் பெரிய அளவில் மாசுபட்டிருக்கின்றன. அந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய குடிசைவாசிகளுக்கு நம்முடைய குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகளைக் கட்டித் தரவோ அல்லது மாற்று ஏற்பாடு ஏதேனும் செய்வதற்கோ இந்த அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன பகுதிகளில் இருக்கின்ற 5 பேரூராட்சிகள் மற்றும் ஒரு நகராட்சிப் பகுதியில், எந்தெந்த பகுதிகளில் வீடில்லாமல் மக்கள் வாழ்கிறார்கள் என்பதைக் கண்டறிந்து, வருவாய்த் துறையில்*

2017 ஜூன் 22]

நிலங்கள் இருந்தால், குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கு மட்டுமல்ல, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தில் எங்கெல்லாம் வீடுகள் வேண்டுமென்று மக்கள் கேட்கின்றார்களோ அந்தந்த நகராட்சிகளின் அருகில் இருக்கின்ற வருவாய்த் துறைக்குச் சொந்தமான இடங்களில் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கின்றார்கள். அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன 5 பேரூராட்சிகள் மற்றும் ஒரு நகராட்சியில் இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டுவதற்கு ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

66—

வட்ட மருத்துவமனை

***1029—திரு. ஏ.பி. நந்தகுமார்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அணைக்கட்டு தொகுதி, அணைக்கட்டு ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி, அணைக்கட்டு அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களாலே அரசாணை எண் 231, நாள் 23–9–2016 அன்று தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்ற நல்ல செய்தியினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.